**வேலூர் மாவட்ட கூடுதல் முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை : திருமதி. எஸ். மணிமொழி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,**

**ந.க.எண்.1370/ DC5/கலை/ஒபக/2023, நாள்: 25.09.2023**

**பொருள் :** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வேலூர் மாவட்டம் – கலைப் பண்பாட்டுத் திருவிழா (KALA UTSV) 2023–2024 மாவட்ட அளவில் போட்டிகள் நடத்துதல் – தேதி மற்றும் இடம் ஆகிய விவரம் தெரிவித்தல் சார்பு.

**பார்வை :**
1. மாநில திட்ட இயக்குநர் கடிதம் ந.க.எண். ACE/159/கலை/ஒபக/2023, நாள்: 23.08.2023
2. இவ்வலுவலக ந.க.எண்.1370/கலை/ஒபக/2023, நாள்: 29.08.2023.

------

பார்வையின் காண் கடிதத்தின்படி வேலூர் மாவட்டம் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வாயிலாக அனைத்து வகை உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களது படைப்பாற்றலை வளர்க்கவும். நமது பாரம்பரிய கலைகளை உயிர்ப்புடன் வைத்திருக்கவும் வாய்ப்பாட்டிசை, கருவியிசை, நடனம் மற்றும் காட்சிக்கலை (Vocal Music, Instrumental Music, Dance, Visual Arts ) மற்றும் தனிநடிப்பு எனும் ஐந்து பெருந்தலைப்புகளில் **கலைப் பண்பாட்டுத் திருவிழா** போட்டிகள் **(KALA UTSAV)** 2015–16 ஆம் கல்வியாண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. பார்வையின்படி இந்தக் கல்வியாண்டிலும் (2023–24) இப்போட்டிகளை நடத்திட அனுமதிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2–ல் கண்டுள்ள முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகளின்படி வேலூர் மாவட்டத்தில் பள்ளி அளவிலான கலை பண்பாட்டு திருவிழா 05.09.2023 *முதல்* 08.09.2023 *வரை* நடத்த தெரிவிக்கப்பட்டது. இதன்படி பள்ளி அளவில் முதலிடம் பெற்ற மாணவ மாணவியர்களை கீழ்கண்டவாறு மாவட்ட அளவிலான போட்டிகளுக்கு **அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, காட்பாடிக்கு** அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| வ. எண் | கலைப் பிரிவு | மாவட்ட அளவிலான போட்டி நடைபெறும் தேதி |
|---|---|---|
| 1. | வாய்ப்பாட்டு இசை செவ்வியல் (Vocal Music– Classical) | 04.10.2023 |
| 2. | வாய்ப்பாட்டிசை – பாரம்பரிய நாட்டுப்புற வகை (Vocal Music – Traditional Folk) | |
| 3. | கருவி இசை – தாள வாத்தியம் (Instrumental Music Percussive) | |
| 4. | கருவி இசை – மெல்லிசை (Instrumental Music Melodic) | |
| 5. | நடனம்–செவ்வியல் (Dance Classic) | |

| | | |
|---|---|---|
| 6. | நடனம் பாரம்பரிய நாட்டுப்புற வகை (Dance Folks) | 04.10.2023 |
| 7. | காட்சிக்கலை (இருபரிமாணம்) (Visual Arts 2 Dimensional) | |
| 8. | காட்சிக்கலை (மூன்று பரிமாணம்) (Visual Arts 3 Dimensional) | |
| 9. | உள்ளூர் தொன்மை பொம்மைகள்–விளையாட்டுகள் (Indigenous Toys and Games) | |
| 10. | நாடகம் (தனிநபர் நடிப்பு) (Drama Solo Acting) | |

அனைத்து கலை பிரிவுகளிலும் பள்ளி அளவில் முதலிடம் பெற்ற மாணவர் மற்றும் மாணவியரை மாவட்ட அளவிலான கலைப் பண்பாட்டுத் திருவிழாவில் பங்கேற்கும் விதமாக தலைமை ஆசிரியர் கையொப்பமிட்ட ஒப்புகையுடன் மேற்கண்ட தேதியில் **அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, காட்பாடிக்கு** அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

குறிப்பு:

1. மாவட்ட போட்டிக்கு வருகை தரும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மதிய உணவு கொண்டு வருதல் வேண்டும்
2. போட்டிக்கு தேவையான இசை பாடல்கள் அடங்கிய CD/Pendrive, Music Player முதலியன கொண்டு வருதல் வேண்டும்
3. ஒரு மாணவருக்கு ஒரு நிகழ்வில் (Event) மட்டுமே பங்கேற்க அனுமதி வழங்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகளில் மாணவர்கள் போட்டியிட்டது கண்டறியப்பட்டால் அந்த பள்ளி தகுதி நீக்கம் செய்யப்படும்

25/9/23

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்
ஒருங்கிணைந்த பள்ளி கல்வி
வேலூர் மாவட்டம்.

25/09/23 25/9/23

பெறுதல் :

1. அனைத்து அரசு/அரசு உதவி பெறும் மற்றும் தனியார் உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் – வேலூர் மாவட்டம்.

நகல்

1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர் மாவட்டம்.
3. மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்), வேலூர் மாவட்டம்.
4. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்.